# உயிர்த்த இயேசுவின் விண்ணேற்பு

திருவழிப்பாட்டு ஆண்டு C (12-05-2013)

## திருப்பலி முன்னுரை:

ஆரவார ஒலியிடையே பவனி செல்கின்றார் கடவுள்! எக்காளம் முழங்கிடவே உயரே ஏறுகின்றார் ஆண்டவர்.

கிறிஸ்துவில் பிரியமுள்ளவர்களே, சிறார்களே, இளைய உள்ளங்களே, சகோதர சகோதிரியரே! இயேசுவின் விண்ணேற்பு ஞாயிறு வாழ்த்துக்கள். உயிர்த்த இயேசுவின் விண்ணேற்பு நாளில், நாம்! நம் மத்தியில், நாம் வாழும் சூழலில், நம்மை தாங்கியிருக்கும் திருச்சபையில், நம் பங்கேற்பையும், பொறுப்பையும், அழைப்பையும் புதுப்பித்துக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் தம்மில் நம்பிக்கை கொண்டவரையும், தம் பணியாளரையும் ஒருபோதும் ஆண்டவர் கைவிடுவதில்லை. தம்மிலே நம்பிக்கை வைத்து வாழ்வோரை, ஆண்டவர்தம் பணியாளர்களை அனுப்பி அருள் நலன்களால் நிரப்புகின்றார். இதோ, என் தந்தை வாக்களித்த வல்லமையை நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும்வரை இந்நகரத்திலேயே இருங்கள் என்னும் ஆற்றல் மிகு ஆசீரை நமக்களித்து நம்மை உறுதிப்படுத்துகின்றார்.

ஆகவே நாம் அனைவரும் என்றென்றும் நம்மோடு நிலைத்து நின்று வாழ்வுதரும் இறைவனது பேரன்பிற்காக நன்றி சொல்லுவோம், ஆண்டவரை முழுமனத்துடன் வணங்கி அவரை முழு உள்ளத்தோடு ஆராதித்து பெருமிகிழ்ச்சி கொள்ளுவோம், இறைவனை எப்பொழுதும் இறை பிரசன்னத்தைத் தேடி அவரைப் போற்றுவோம், இறைவனின் சாட்சிகளாய் வாழ நம்மை அர்ப்பணிப்போம். தீர்மானங்களுடன் திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**அன்பே உருவான இறைவா,**

தாம் தெரிந்து கொண்ட திருத்தூதர்களுக்கு தூய ஆவியின் துணையோடு செய்ய வேண்டியவற்றை உம் திருமகன் இயேசு அறிவுறுத்தியது போல, சவால்கள் பெருகிவிட்ட இன்றைய இக்காலகட்டத்தில் எம் திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவருக்கும், சீரிய வழிகாட்டுதல்லளையும், ஞானத்தையும், அறிவுரைகளையும் நீரே வழங்கி, நற்செய்தியைத் தம் வாழ்வாலும், பணியாலும் அறிவிக்கும் ஆற்றலை அவாகளுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**விண்ணில் வாழ்பவராம் இறைவா,**

இவ்வுலகின் சுகங்களை நாடி உம்மைப் புறக்கணித்து வாழும் மக்கள் அனைவரும், விண்ணக வாழ்வைப் பற்றி சிந்திக்கவும், நீர் காண்பித்த அன்பு வழியில் நடந்து விண்ணக வாழ்வை உரிமையாக்கிக்கொள்ளவும் உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**வாழ்வளிப்பவராம் இறைவா,**

உலகில் ஏற்படும் மாற்றங்கள் எங்கள் நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் அச்சுறுத்தலாக அமைந்து, எங்கள் உள்ளங்களைக் கலக்கமடையச் செய்கின்றபோது நாம் நிலை குலைந்து போகாமல், உமது வாக்குறுதிகள் நிறைவேறும் என்பதில் உறுதியோடு காத்திருக்கும் நல்லுள்ளத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்பின் பிறப்பிடமே இறைவா,**

எம் இளைஞர்கள், இளம் பெண்கள் அனைவரும், இயேசு தம் திருத்தூதர்களுக்குக் கொடுத்தது போன்ற ஆற்றலையும், சக்தியையும் பெற்று தாம் வாழும் சமுதாயத்திற்கு நன்மை செய்கின்றவர்களாகவும், உமது நற்செய்தியின் தூதுவர்களாகவும் செயற்படும் சக்தியை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**என்றென்றும் பேரன்பை நிலையாகக் கொண்டுள்ள தந்தையே!**

பிரிவினைகளோடும், கசப்புணர்வுகளோடும், பழிவாங்கும் மனநிலையோடும், வேதனைகளோடும், விரக்தியோடும், கண்ணீரோடும் வாழும் கணவன் மனைவி அனைவர்மீதும் மனமிரங்கி அவர்களின் அன்பு தூய்மையானதாகவும், நிலையானதாகவும் இருக்கவும், அவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கேற்ப பிரமாணிக்கமாய் வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திடவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.